Proceedings of Jaffna University International Research Conference (JUICE-2012), pp. 245-251, published: March 2014, Sri Lanka

# யாழ்ப்பாணத்து இந்து ஆலயங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகளும்

சு.சிறிமுரளிதரன்
இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
ssrimuralitharan@yahoo.com

**ஆய்வுச்சுருக்கம்:** தொன்மையும், சிறப்பும் மிக்க சனாதன தர்மம் எனப்படும் இந்துசமயம் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் 86%க்கு மேற்பட்டவர்களால் பின்பற்றப்படும் சிறப்பிற்குரியது. இந்துசமயத்தினை வளர்த்தெடுப்பதில் ஆலயங்களின் பங்கு அளப்பரியது. இந்து ஆலயங்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. மாறிவரும் உலகில் சமய, சமூக விழுமியங்கள் பல இன்று கேள்விக்குரியதாக விளங்குகின்றன. இத்தகைய சூழ்நிலையில் ஆலயங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இனம் காணப்பட்டுள்ளதுடன் இந்து ஆலயங்கள் செயல்திறன் கொண்ட சமூக மைய நிறுவனமாக மாற்றியமைப்பதற்கு சில தீர்வுகளும் முன்வைக்கப்படுகின்றன.

**திறவுச்சொற்கள்:** இந்துசமயம், இந்து ஆலயங்கள், வழிபாடு.

## I. ஆய்வின் அறிமுகம்

யாழ்ப்பாணம் கோயிற் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்ட பிரதேசமாகும். இப்பிரதேசத்தில் 86%க்கும் மேற்பட்ட இந்துக்கள் வாழ்ந்து வருகின்றனர் [1]. இந்துப்பண்பாட்டை வளர்த்தெடுப்பதில் இந்து ஆலயங்களின் பங்கும் பணியும் காலந்தோறும் பெருமளவு துணைபுரிந்து வருகின்றன. எனினும் ஒவ்வொரு காலகட்டத்திலும் இந்து ஆலயங்கள் பல பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். 1505ஆம் ஆண்டு தொடக்கம் 1947ஆம் ஆண்டு வரை 442 ஆண்டுகள் மேலைத் தேசத்தவரின் ஆட்சி, செல்வாக்கில் ஈழத்து இந்துக்கள் வாழ வேண்டியேற்பட்டது. இதனால் சமயத்தில் ஏற்பட்ட தளர்ச்சி நிலை ஆலயத்தையும் பாதித்தது. அக்காலத்தில் வரலாற்றுப்புகழ் கொண்ட ஆலயங்கள் பல தரைமட்டமாக்கப்பட்டன, விக்கிரகங்கள் சூறையாடப்பட்டன, வழிபாட்டு முறைகள் தடை செய்யப்பட்டன, மத மாற்றங்கள் இடம் பெற்றன. இவ்வகையில் யாழ்ப்பாணத்து இந்து ஆலயங்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தன. இவ்வாறான சூழ்நிலையில் 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தமிழ்க்கல்வி, மிக உயர்ந்த பேச்சாற்றல், சுயசிந்தனை ஆற்றல், மன உறுதி, மொழி ஆற்றல், என்பவற்றினால் இந்து சமயத்திற்கும், இந்து ஆலயங்களுக்கும் ஏற்பட்ட இடர்களைக் களைந்து இந்துசமயத்திலே விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

தற்காலத்திலும் இந்து ஆலயங்களின் வளர்ச்சி நிலையில் பல்வேறு பிரச்சினைகள் புதிய வடிவில் எழுந்துள்ளன. இதனை எதிர்கொள்ள முடியாத ஒரு தளர்வு நிலை காணப்படுகின்றது. குறிப்பாக, கடந்த மூன்று தசாப்தகாலமாக யாழ்ப்பாணத்து இந்து ஆலயங்கள் பல வழிகளிலும் பாதிப்படைந்து வந்துள்ளன. இக்காலத்தில் நிலவிய யுத்தம், அகதி வாழ்க்கை, பட்டினிச்சுமை, அதிர்ச்சி, சோகம், பயம், எதிர்காலம் பற்றிய நம்பிக்கையீனம், ஆகியவற்றால் நலிவடைந்துள்ள இந்துக்களது வாழ்வியல் அவலங்கள், அதன் விளைவாக இந்துக்களது சிந்தனைத் தெளிவின்மை போன்ற காரணங்களினால் சமூகப் பெறுமானங்கள், விழுமியங்கள் வலுவிழக்கப்படவும், மீறப்படவும் தூண்டுதல் அளித்தன. இவ்வாறான நலிந்த சமூக, பண்பாட்டு சூழ்நிலையில்தான் இந்து ஆலயங்கள் பெரும் பிரச்சினைகளை உள்வாங்க நேரிட்டது.

## II. ஆய்வின் நோக்கம்

இந்து ஆலயங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இன்றைய சூழ்நிலையில் வெளிக் கொணர்வதும், இப்பிரச்சினைகளுக்கான காரணங்களைத் தெளிவாக இனம் கண்டு யாழ்ப்பாணத்து இந்து ஆலயங்களின் வளமான மேம்பாட்டிற்கான முன்மொழிவுகளை எடுத்துரைப்பதும் இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது.

## III. ஆய்வின் வரையறை

இவ்வாய்வானது யாழ்ப்பாண மாவட்டத்தை மட்டும் ஆய்வு எல்லையாகக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்து இந்து ஆலயங்களை சைவ ஆலயங்கள் என்று அழைக்கும் மரபு காணப்படுகின்றது. "சைவம் என்ற பெயரைக்காட்டிலும் 'இந்து' என்ற பெயரே சர்வதேச ரீதியில் வழங்குவதால் சைவத்தை இந்து என்று வழங்குவது தவிர்க்க முடியாதவாறு உலகப் பிரசித்தி பெற்றுவிடுகின்றது" [2] எனும் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களது கருத்தின்படி இவ்வாய்வில் இடம்பெறும் இந்து ஆலயங்கள் சைவ ஆலயங்களாகவே நோக்கப்படுகின்றன.

## IV. ஆய்வின் மூலங்கள்

சமகாலத்தில் வெளிவந்த சஞ்சிகைகள், பத்திரிகைக் குறிப்புக்கள், இந்து ஆலயங்கள் தொடர்பான பிரதேச செயலக ரீதியான அறிக்கைகள் மற்றும் கள ஆய்வுகள் மூலம் பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## V. ஆய்வு முறையியல்

விபரண முறை, பகுப்பாய்வு முறை ஆகிய ஆய்வு முறைமைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்கான விடயங்கள் கள ஆய்வு மூலம் வெளிக் கொணரப்படுகின்றது.

## VI. ஆய்வின் கண்டுபிடிப்புகள்

கடந்த கால அசாதாரண சூழ்நிலையினால் இந்து ஆலயங்கள் பெரும் பிரச்சினைகளை உள்வாங்க நேரிட்டது. அந்த வகையில் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் சமகாலத்தில் ஒரு சில இந்து ஆலயங்கள் எதிர்கொள்ளும் பிரதான பிரச்சினைகளான, நிர்வாகச் சீர்கேடு, திருப்பணி வேலைகளில் ஒழுங்கு பேணப்படாமை, கிரியைகள், விழாக்கள், விரதங்கள் என்பவற்றை உரியவாறு முறைமையாகப் பேணாது இருத்தல், ஆலயங்களை வழிபட வருவோர் அதற்குரிய ஒழுங்கு, ஒழுக்கத்தைக் கடைப்பிடியாதிருத்தல், சாஸ்திரிய முறைப்படி ஆலயங்களில் கலைகள் பின்பற்றப்படாமை, ஆலயச்சூழல் பிற சமய நிகழ்வுகளால் பாதிப்படைதல், பலியிடல் போன்ற மூடநம்பிக்கைகளுக்கு முக்கியம் கொடுத்தல், பஞ்சாங்க நடைமுறைகளினால் ஏற்படும் முரண்பாடுகள், திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்தல், நகர நிர்மாண வேலைத் திட்டங்களினால் பாரம்பரிய, புனித இடங்கள் அழிக்கப்படுதல் என்பன இனம் காணப்பட்டுள்ளன.

இந்து ஆலய நிர்வாகச் சீர்கேடு எனும் போது ஆலயத்துடன் தொடர்புடைய பலதரப்பட்ட பிரிவினர்களுக்கு இடையே இடம்பெறுகின்ற முரண்பாடுகளைக் குறிப்பிடலாம். அந்த வகையில் ஆலய நிர்வாகத்திற்கும் வழிபடுவோர்க்கும் இடையிலான பிரச்சினை, ஆலய நிர்வாகத் தினருக்கும் திருப்பணிச் சபையினருக்கும் இடையிலான பிரச்சினை, பரம்பரை ஆலய அறங்காவலர் சபையில் காணப்படும் பிரச்சினை, ஆலய குருவிற்கும் ஆலய நிர்வாகம், வழிபடுவோர் ஆகியோருக்கு இடையிலான பிரச்சினை என நோக்க முடிகிறது.

ஆலய நிர்வாகத் தெரிவில் வயது, பணம், சாதி, அந்தஸ்து போன்ற காரணிகள் அதீத செல்வாக்குச் செலுத்துவதினால் ஆத்மீகத்துவமும், சமூக ஈடுபாடும் கொண்ட வினைத்திறமை வாய்ந்த நிர்வாகத்தைத் தெரிவு செய்ய முடியாத நிலை ஏற்படுகின்றது. சிறந்த தலைமைத்துவம் இல்லாததனால் மக்கள் வழிபாட்டினை சுமூகமாக மேற்கொள்ள முடியாத நிலையில் இருபிரிவினருக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் ஏற்படுகின்றன.

சமகாலத்தில் ஆலயங்கள் பல புலம்பெயர்வாழ் மக்களின் பெருமளவு நிதியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. அதேவேளை வரவு செலவு அறிக்கைகள் ஒழுங்காகப் பேணப் படாததன் காரணத்தினால் நிதி, நிர்வாக துஷ்பிரயோகங்கள் நடைபெறுவதையும் காணமுடிகிறது. இதனால் நிர்வாகத்திற்கும் - திருப்பணிச் சபைக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படுகின்றன.

எமது பிரதேசத்தில் காணப்படும் ஆலயங்கள் சில தனிப்பட்ட அல்லது பரம்பரை ஆலய அறங்காவலர் சபையைக் கொண்ட ஆலயங்களாகத் திகழ்கின்றன. குடும்ப, கௌரவப் பிரச்சனைகள் காரணமாக அறங்காவலர் சபையின் தனியுரிமை நிர்வாகத்தின் அசமந்தப் போக்கினால் சிவாச்சாரியர்களும், வழிபடுவோர்களும் பாதிப்புக்குள்ளாவதைக் காணமுடிகின்றது.

நிர்வாகச்சீர்கேட்டில் இறுதியாக ஆலயக் குருவுக்கும் ஆலய நிர்வாகம்,மற்றும் வழிபடுவோருக்கும் இடையிலான பிரச்சினை முக்கியமானது. சிவாச்சாரியர்கள் இறைவனையும் வழிபடுவோனையும் இணைக்கும் தூதுவர்கள். ஆனால் அவர்களில் ஒரு சிலர் பூஜை செய்வதை ஊதியத்தைப் பெறுவதற்கான ஒரு தொழிலாக மட்டும் கருதுவதினால் குரு, நிர்வாகம், - வழிபடுவோர் எனும் முத்தரப்பினருக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்படுகின்றன. அந்தணர்கள் பலர் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் பணிபுரிவதினாலும், புலம்பெயர்ந்து பிற நாடுகளுக்கு செல்வதினாலும் அந்தணர் பற்றாக்குறை ஏற்படுகின்றது. அத்துடன் நிர்வாகத்தினால் சிவாச்சாரியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் இன்றைய பொருளாதார வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கக் கூடிதாக இல்லை. இக்காரணங்களினால் ஒரு அந்தணர் பல ஆலயங்களில் பணியாற்ற வேண்டியுள்ளது. இதனால் பூஜை ஒழுங்குகளை உரியவாறு பேணமுடியாத நிலை ஏற்படுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் சிவாச்சாரியர்களுக்கும், நிர்வாகத்திற்கும் இடையில் முறுகல் நிலை ஏற்படுகின்றது. வேதாகமத்தை நன்கு பயில வேண்டும் என்பதில் அக்கறையின்மையும், ஒழுக்கத்தில் பிறழ்வும் காணப்படுவதினால் அந்தணர் ஒரு சிலருக்கு சமூகம் உரிய அந்தஸ்தை வழங்கத் தவறுகின்றது. இவ்வாறான நிலைகளில் “பூசகர் பதவிக்கு ஒழுக்கமும், திறமையும் உள்ள பிராமண குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் தேவை” என பத்திரிகையில் விளம்பரப்படுத்தி [11] பூசகர் தெரிவு செய்யப்படுவதை இன்று காணமுடிகின்றது.

மேற்கூறியவாறு நிர்வாகச்சீர்கேடுகள் இடம்பெறும் போது இந்து குருமார் ஒன்றியம், பிரதேச செயலகங்கள், நீதிமன்றம் வரை பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு செல்லவேண்டியுள்ளது. ஆலயப்பிரச்சினைகள் உருவாகும் போது பிரதேச செயலர் ஊடாக பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர், இந்துசமய கலாசார அமைச்சின் கலாசார அபிவிருத்தி அலுவலர்கள் பிரச்சினைகளை இனம்கண்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு களம் இறங்குகின்றார்கள். “தமது வேலைத் திட்டதில் ஒரு விடயமாக கோயில் இருந்தாலும் இன்று அதிக நேரம் கோயில் பிரச்சினைகளை இனம் காண செலவிடுகின்றோம்” என்று கலாசார உத்தியோகத்தர் [3] கூறுமளவிற்கு சமகாலத்தில் ஆலயங்கள் பலவிதமான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன என்பதனை அறியமுடிகின்றது. இவை இந்துக்களின் நலன்கருதி அனைத்து நிலைகளிலும் தவிர்க்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும்.

பல்லவர், சோழர் காலங்களில் ஆலயங்கள் நீதிவழங்கும் நிறுவனமாக இருந்து செயல்பட்ட திறனையும் இன்று ஆலயங்கள் நீதிமன்றத்திற்கு செல்லுகின்ற நிலைமையையும் நோக்கும் போது வேதனைக்குரியதே.

ஆலயத்திற்கு ஆலயம் திருப்பணி வேலைகள் அதிதீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் பிரச்சினைகளும் அதிகரித்தவண்ணமே உள்ளன. ஆரம்ப காலங்களில் ஆகம, சிற்ப சாஸ்திரம் நன்கு பயின்ற, அனுபவம் வாய்ந்த ஸ்தபதி பரம்பரையினர் ஆலயங்களை அமைத்தனர். சமகாலத்தில் சாஸ்திர அறிவு பெரிதும் எதிர்பார்க்கமுடியாத ஒப்பந்தகாரர் இனம், மதம், மொழி வேறுபாடின்றி யாவரையும் உள்வாங்கிய நிலையில் திருப்பணி வேலைகள் நடைபெறுகின்றன. புலம்பெயர் வாழ் இந்துக்களின் பெருந்தொகையான பணவரவினால் அசௌகரித்தை ஏற்படுத்தும் வகையில் நிலத்திற்கு கருங்கல் திருப்பணிக்குப் பதிலாக மாபிள் பதித்தல், காற்றோட்டம் இல்லாதவகையில் கூரைக்கு சீற் போடுதல், பக்தர்கள் அமைதியாக இருந்து வழிபாடு செய்ய முடியாத வகையில் அளவுக்கதிகமான அலங்காரத்தூண்கள் அமைத்தல் போன்ற முறையற்ற ஆலய நிர்மாணங்கள் இடம்பெறுகின்றன.

முறைமையாகப் பேணப்படாத கிரியைகளினாலும் ஆலயங்கள் பல பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றன. அவற்றில் முக்கியமானது இருபஞ்சாங்க நடைமுறை. அறிவியல் ரீதியில் கணிக்கப்படும் திருக்கணித பஞ்சாங்கமும், ரிஷிகளின் வாக்கால் அமைந்த வாக்கிய பஞ்சாங்கமும் கணிப்பு வித்தியாசப்படுகின்றது. இதனால் எவ்விழாவாயினும் ஆலயங்களில் இரு முறை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் ஆலயத்திற்கு ஆலயம், மக்களுக்கு மக்கள் கருத்து

முரண்பாடுகள் ஏற்படுவதுடன், பிறமதங்களின் விமர்சனமும் ஏற்படுகின்றது. சமகாலத்தில் மக்கள் இயந்திர வாழ்க்கை வாழ்வதுடன், அதிகரித்த பொழுதுபோக்கு வசதிகளினால் பல ஆலயங்களுக்கு பக்தர்களின் வருகை மிகவும் குறைந்து விட்டது. இதனால், திருவிழாக் காலங்களில் கூட சுவாமி திருவீதி உலாவரும் போது விதி முறைகளை மாற்ற வேண்டிய நிலையும், பக்தர்களின் வருகைக்காக காத்திருக்க வேண்டிய நிலையும் காணப்படுகின்றது. பூஜைக்குரிய மலர்கள் எவை என்பது பற்றிய அறிவு போதியளவு இல்லாததினால் சில ஆலயங்களில் “பூஜா விதிமுறைகள்” கடைப்பிடிப்பதில்லை.

ஆலய பக்தர்களின் ஒழுங்கீனமான செயல்பாடுகளினால் ஆலயங்கள் பல பிரச்சினைகளை உள்வாங்கியுள்ளன. இளம் வயதினரின் ஆடை அணிகலன்களின் ஒழுங்கீனமும், ஆலய வெளிப்புற வீதியில் அதிக நேரத்தை செலவு செய்வதாலும் கலாசார சீரழிவுக்கு உட்படுவதை காணமுடிகின்றது. பூஜை வேளைகளில் கதைத்தல், கைத்தொலைபேசிப் பாவனை, பெண்கள் ஆலயங்களுக்கு அதிக நகைகளை போட்டு வருதல் போன்ற காரணங்களினால் உளவியல் தாக்கம் ஏற்படுகின்றது. மகோற்சவ காலங்களில் குறிப்பாக தீர்த்த உற்சவத்தன்று தீர்த்தக் கேணியில் இளைஞர்களால் நடாத்தப்படும் களியாட்டங்கள் கீழ்த்தரமான செயல்பாடுகளாகும். “தீர்த்த தண்ணீரை பக்தர்களுக்கு ஊற்றும் செயற்பாட்டிற்கு தீர்வு காணவேண்டும்” என நல்லை ஆதின முதல்வரின் கோரிக்கை சிந்திக்கத்தக்கது [12]. ஆலயங்களில் உயிர்ப்பலி வேள்விகள் சமகாலத்தில் குறைவடைந்த போதிலும், இன்றும் ஒருசில ஆலயங்களில் நடைபெறுவது பாரிய பிரச்சினையாக உள்ளது. பக்தர்கள் ஆலயங்களுக்கு வரும்போது அர்ச்சனைப் பொருட்களை ஆசாரமுறையில் கொண்டு வருவதில்லை. இன்று சூழலை அச்சுறுத்தும் “சொப்பிங் பையில்” அர்ச்சனைப் பொருட்களும், “பிளாஸ்ரிக் போத்தலில்” பால், தயிர் கொண்டு வருதலும் முக்கிய பிரச்சினையாக காணப்படுகின்றது.

சாஸ்திரிய முறையில் அமையாத ஆலயக் கலைகளினாலும் இன்று ஆலயங்கள் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. இறைவனுக்கு செய்யப்படுகின்ற சோடச உபசாரங்களில் முக்கிய இடம் வகிக்கும் கலைகள் இன்று கீழ்நிலைக்கு செல்கின்றன. நவசந்திக் கிரியைகளில் ஒவ்வொரு சந்திகளிலும் என்ன வேதம், ராகம், தாளம், பண், நிருத்தம், வாத்தியம் இடம்பெறவேண்டும் என்பதனை ஆகமங்கள் விதித்துள்ளன. ஆனால் இன்று வெளிவீதி சுற்றிவரும் போது இடம்பெறும் தவில்-நாதஸ்வர கச்சேரியின் போது சினிமாப்பாடல்கள் வாசிக்கப்படுகின்றமை தவிர்க்கப்பட வேண்டியது. “இந்துக் கோயில்களில் சினிமாப்பாடல்கள் ஒலிபரப்புவது தடைசெய்யப்பட வேண்டும்” [8] என்பதை இந்து அபிமானிகள் கூட்டாக சேர்ந்து ஊடகங்களில் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடற்பாலது. கிரியைகளின் பின்னர் “பஞ்சபுராணம் ஓதுக” என சிவாச்சாரியர் கூறுகின்ற நேரத்தில் இளம் தலைமுறையினர் பாடுவதற்கு தயங்கும் நிலை காணப்படுகின்றது. பாடுபவர்களும் பஞ்சபுராணத்தில் பண், பொருள் விளங்காது பாடுகின்றார்கள். ஆத்மிக உள நலத்திற்கான செயல்பாடுகளான பிரசங்க மரபு, நற்சிந்தனை கூட்டுப்பிரார்த்தனை என்பன ஆலயங்களில் அருகிவருகின்றன. மேலும் ஆலயங்களுடன் இணைந்திருக்கும் திருமண மண்டபங்களினால் ஆலயங்களுக்கு பொருளாதார நன்மைகள் கிடைத்தாலும் ஆசாரசீல மற்றவர்களும் மண்டபத்திற்கு செல்வதினால் சைவ விழுமியங்களை ஆலயங்கள் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அலங்காரக்கலையில் முக்கிய இடம்பெறும் சாத்துப்படிக்கலை இன்று பக்தி நிலைக்கு அப்பாற்பட்டதொன்றாக மாறிவருகின்றது. திருவிழாக் காலங்களில் இடம்பெறும் வாணவேடிக்கைகள், ஒலி பெருக்கிகள் என்பன களியாட்ட நிகழ்வுகளாக அமைந்து, சைவ விழுமியத்தை பாதிப்படையச் செய்கின்றன.

ஆலயச்சூழல் பிற நிகழ்வுகளால் பாதிப்படைகின்ற நிலையும் காணப்படுகின்றது. குறிப்பாக, இந்து சமய ஆலயங்கள் இடிக்கப்பட்டு அல்லது அதற்கு அருகில் வேறு மதத்தலங்கள் அமைக்கப்படுகின்றன [7]. இந்துக்கள் சுதந்திரமாக வழிபடும் சூழ்நிலை உருவாக்கப்படுதல் மிகவும் அவசியம். இந்து ஆலயங்கள் மீது அரசு அதிக கவனம் செலுத்தாமையினால் ஆலயங்கள் நிதிப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. “2011ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இந்து சமய திணைக்கள ஆன்மிக செயற்பாடுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைவிட சுமார் 11.245 மில்லியன் குறைக்கப்பட்டமை”, “எமது மாகாணத்தில் கடந்த யுத்தத்தினால் சுமார் 1471 இந்து ஆலயங்கள் பாதிப்படைந்துள்ளன. (பதிவு செய்த ஆலயங்கள் மட்டும்) இவற்றிற்கு வழங்கும் நிதி 8,800.00 ரூபா

மட்டுமே” [4]. இச்செய்தியானது இந்து ஆலயங்கள் மீது அரசின் அக்கறையின்மையை எடுத்துக் காட்டுகின்றது.

சமீபகாலங்களில் ஆலயங்களில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்தமை இந்துக்களது மனதை புண்படுத்துகின்ற செயலாகவும், ஒர் அச்சுறுத்தலாகவும் அமைகின்றது. ஆலய உண்டியல்கள் உடைக்கப்படுகின்றன, ஆலயக்குருவின் இல்லத்தில் களவு, கொலை நடைபெறுகின்றது, பக்தர்களின் பெறுமதி மிக்க உடைமைகள் திருடப்படுகின்றன, ஆலயங்களின் மதிப்புமிக்க விக்கிரகங்கள், வாகனங்கள் சேதமாக்கப்படுகின்றன, அல்லது திருடப்படுகின்றன. ‘பொற்பதி பிள்ளையார் கோயிலில் இரவு வேளை துணிகரத் திருட்டு, பத்து இலட்சம் பெறுமதியான பொருட்கள் சூறை’[10]. இவ்வாறு தினசரி பத்திரிகைகளில் செய்திகள் பிரசுரிக்கப் படுவதைக் காணமுடிகின்றது.

குடியிருப்புக்களின் விரிசல்களினால் ஆலய வீதிகளின் அளவு குறைக்கப்பட்டு, சுவாமி வீதிவலம் வருவதில் பாதிப்பு ஏற்படுகின்றது. தற்பொழுது பெருவீதிகளின் அகலிப்பு நடவடிக்கையினால் பல இந்து ஆலயங்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி உள்ளன.

ஆலய சூழலை நாடிவரும் புதிய பொருளாதார நடவடிக்கையினாலும் இன்று ஆலயங்கள் மாசடைகின்றன. ஆலய வீதியில் சிற்றூண்டி விற்பனை, பூங்கன்றுகள் விற்பனை தொடர்பாக அடியவர்கள் விசனம் தெரிவிப்பு’ [9] எனும் பத்திரிகை செய்தியானது ஆலயம் எதிர்நோக்கும் சமகால பிரச்சினைகளை எடுத்துக்காட்டுகின்றது.

## VII. ஆய்வின் முன்மொழிவுகளும், முன்னிலைப்படுத்தலும்

இந்து ஆலயங்கள் எதிர்நோக்கும் சமகாலப் பிரச்சினைகளுக்கு இவ்வாய்வின் மூலம் முன்மொழியப்படும் தீர்வுகளாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

- மறுசீரமைக்கப்பட்ட ஆலய நிர்வாக, திருப்பணி சபைகளை உருவாக்குதல் காலத்தின் தேவையாக உள்ளது. “அனுபவம் இல்லாத ஆற்றலும், ஆற்றல் இல்லாத அனுபவமும் பயன் தராது” என்பதற்கு அமைய இந்து சமய செயற்பாடுகளில் சமய ஞானமும், சமூக ஈடுபாடும் கொண்டவர்களை உள்வாங்குவது அவசியம். அத்துடன், இச்சபைகளிலே முதியவர்களுடன் இளைஞர்களையும் மற்றும் ஆசாரமுள்ள பெண்களையும் ஒன்றிணைத்துக் கொள்ளவேண்டும்.
- நவீன கால மாற்றத்திற்கு ஏற்ற வகையில் இந்துமதக் கருத்துக்கள். வாழ்வியல் சிந்தனைகள் யாவும் நவீன, விஞ்ஞான கொள்கையுடன் இணைந்த வகையில் செயற்படுதல் வேண்டும்.
- இந்து சமய நம்பிக்கைகளை மேம்படுத்தும் வகையிலும். சிறந்த ஒழுக்கம், பண்பாடு போன்றவற்றை வலுப்படுத்தும் நோக்கிலும் விழிப்புணர்வு கருத்தரங்குகள், ஆன்மீக சொற்பொழிவுகள் மற்றும் சமய பயிற்சிப்பட்டறைகள் போன்றவற்றை நடாத்துதல் வேண்டும்.
- இந்து சமய பெரியார்கள், இந்து சமய நிறுவனங்கள் மற்றும் இந்து சமய கல்விமான்கள் ஆகியோரின் முறையான வழிகாட்டலின் கீழ் ஆலயங்கள் இயங்குதல் வேண்டும். அந்தவகையில், இந்து சமய ஆலய பிணக்குகளை தீர்க்க “நடு தீர்ப்பு மையம்”, இந்து மத விரோத செயற்பாடுகளைத் தடுக்க “இந்து மகாசபை” அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் தோற்றுவிக்கப்பட்டுள்ளமை சிறப்பான அம்சமாகும் [5].
- பாடசாலை, மற்றும் பல்கலைக்கழக கல்வியில் இந்துசமயக்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும். ஆறுமுக நாவலரும் நாலாம் பாலபாடத்திலே “சமயமே குழந்தையை நல்லவனாக உருவாக்குவதில் அதிக பங்கை செலுத்துகின்றது. குழந்தையின் சமய நம்பிக்கைக்கு தீங்கு வரக்கூடிய வகையில் கல்வி அமையுமானால் கல்வியின் பயன் அற்றுவிடும்” என்கிறார். கல்வி சமயத்தின் அடிப்படையில் அமைதல் வேண்டும். அதிலும் சிறப்பாக மனித விழுமியங்களுடன் கூடிய இந்து சமயக் கல்வியின் ஊடாக நற்பிரஜைகளை உருவாக்கலாம். அதன் மூலம் ஆலயங்களை உரிய முறையில் பரிபாலிக்கலாம்.

- இந்துக்கள் பிரச்சினைகள் வரும் போது குரல் கொடுப்பதற்கும், கண்டனத்தை வெளியிடுவதற்கும் தயங்கக்கூடாது. குரல் கொடுக்கும் போது சாதகமான முடிவுகளை ஏற்படுத்த முடியும் என்பதற்கு சிறந்த சான்றாக “சர்வதேச இந்து மத பீடம்” வெளியிட்ட கண்டனத்தின் மூலம் அமெரிக்கா நிறுவனம் ஒன்றினால் குடிவகை (பியர்)க்கு விளம்பரமாக பிரசுரிக்கப்பட்ட அம்மனின் படம் மன்னிப்புக்கோரி வாபஸ் பெறப்பட்டமை இந்து பீடத்தின் பலத்தினைக் காட்டுகிறது [6].
- இந்து சமய குருமார் ஒன்றியத்தினை மேலும் வலுப்படுத்தி அதன் ஊடாக அந்தணர்களுக்கு சமஸ்கிருதம், ஆங்கிலம், கணனி பயிற்சிகளை வழங்குவதன் மூலமாக வேத, ஆகம தேர்ச்சி பெற்றவர்களாகவும், ஒழுக்கசீலர்களாகவும் விளங்கி சமூகத்தின் உயர் அந்தஸ்தினைப் பெறக்கூடியதாக இருக்கும்.
- இரு பஞ்சாங்கங்களின் கணிப்புக்கள் வித்தியாசப்படுவதினால் இரண்டையும் ஒன்று சேர்ப்பது என்பது மிக கடினமான விடயம். கடந்தகாலத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் எவையும் பலன் தராததன் காரணத்தினால் இந்து மக்கள் ஒவ்வொருவரும் தத்தமது நம்பிக்கைககளுக்கு ஏற்றவகையில் பஞ்சாங்க நடைமுறைகளை பின்பற்றுவதே சாலச்சிறந்தது.
- ஆலயங்களில் ஏற்படுகின்ற நிர்மாண, புனரமைப்பு மற்றும் கிரியைகள் தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகளுக்கு முன்கூட்டியே சாஸ்திர வல்லுநர்களின் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.
- இந்து ஆலயங்களின் நிர்வாகக் கட்டமைப்பினை ஒரே தலைமையின் கீழ் கொண்டு வந்து, அத்தலைமையின் தீர்மானங்களையும் மற்றும் ஆலோசனைகளையும் உரிய முறையில் உள் வாங்கி அவற்றினை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தக் கூடிய மனப் பக்குவத்தினை அனைவரும் கொண்டிருக்க வேண்டும்.
- ஆலயத்தின் வளர்ச்சி பற்றி திட்டமிடும் போது பொருளாதாரம், இடவசதி, மக்கள் பங்களிப்பு போன்றவற்றை கருத்தில் கொண்டு தூர நோக்குடைய சிந்தனையாக அமைதல் வேண்டும்.
- ஆலயங்களில் நடைபெறும் திருட்டுக்களைத் தடுப்பதற்கு மக்களின் ஒத்துழைப்புடன் சமய விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடாத்துதல், விழிப்புக்குழுக்களை அமைத்தல், கமராக்களை பொருத்துதல் (CCTV) மற்றும் காவலாளிகளை அமர்த்தல் போன்ற செயற்பாடுகளின் ஊடாக திருட்டுக்களை குறைக்கவோ அன்றி தடுக்கவோ முடியும்.
- ஆலய உடைமைகளுக்குரிய பொருட்பதிவேடு மற்றும் நில உடமைகளுக்குரிய உறுதிகள் யாவும் சிறந்த முறையில் பேணிப்பாதுகாக்கப்படுதல் வேண்டும்.
- மாற்றுவலுவுள்ளோரும் ஆலயங்களுக்கு சென்று வழிபடுவதற்கு உரிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். உலக நாடுகளில் மற்றும் அரச திணைக்களங்களில் செய்யப்பட்ட வசதிகள் போன்று இந்து ஆலயங்களிலும் செயற்படுத்துதல் காலத்தின் தேவையாகும்.
- ஆலயங்களுக்கு வரும் பக்தர்களின் அடிப்படைத் தேவைகளாகிய மலசலகூடம், குடிநீர் போன்ற வசதிகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.
- ஆலயங்கள் “சமுதாய மையங்கள்” என்பதனைக் கருத்தில் கொண்டு செயற்படுதல் அவசியமாகும். அதாவது, வழிபாட்டுத் தலங்களாக மட்டுமன்றி சமுகத்தின் தேவைகளை நிறைவு செய்யும் ஒரு நிறுவனமாக வளர வேண்டும்.
- இந்து ஆலயங்கள், அவற்றோடு தொடர்புடையவர்களின் கடமைகள், உரிமைகள் தொடர்பாக “இந்துச் சட்டம்” அமைக்கப்பட வேண்டும்.

## VIII. முடிவுரை

மேற்படி இந்துசமயம் எதிர்நோக்கும் சமகால பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளை முன்வைத்து, அவற்றினை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக, நீடித்து நிலைத்து நிற்கக்கூடிய வகையில் இந்து ஆலய செயற்பாடுகள் அமைந்து, மீண்டும் இந்து ஆலயங்களை செயல்திறன் கொண்ட ஒரு சமய, சமூக மைய நிறுவனமாக மாற்றியமைக்க முடியும் என்பதனை இவ்வாய்வு வற்புறுத்தி நிற்கின்றது.

## உசாத்துணைகள்


[1]. http://www. Statistics.gov.lk, Department of Census and Statistics.
[2]. கைலாசநாதக்குருக்கள், கா., இந்துப்பண்பாடு சில சிந்தனைகள், பேராசிரியர் கா.கைலாசநாதக்குருக்கள் இரண்டாம் ஆண்டு நினைவு வெளியீடு – 09, கைலாசநாதக்குருக்கள் ஞாபகார்த்த சபை, ப.37, 2002.
[3]. நேர்காணல், சி. சிவஞானசீலன், வயது 43, கலாசார உத்தியோகத்தர், கரவெட்டி பிரதேச செயலகம், 2012.
[4]. தினக்குரல் நாளேடு, 10/12/2011, ப.15.
[5]. தினக்குரல் நாளேடு, 09/05/2012, ப.05.
[6]. தினக்குரல் நாளேடு, 18/05/2012, ப.15.
[7]. தினக்குரல் நாளேடு, 29/06/2012, ப.09.
[8]. தினக்குரல் நாளேடு, 10/07/2012, ப.06.
[9]. தினக்குரல் நாளேடு, 27/07/2012, ப.04.
[10]. தினக்குரல் நாளேடு, 13/08/2012, ப.01.
[11]. உதயன் நாளேடு, 22/05/2012, ப.20B
[12]. உதயன் நாளேடு, 31/05/2012, ப.07.